**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO.226/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW8 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 02nd day of September 2024.

**(A1 to A3 are present. )**

# S.C. No. 226/2018

# 02.09.2024

**அ.த.சா.8 - திரு. ராமதாஸ் , த/பெ. ரத்தின செட்டியார்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கும்மிடிப்பூண்டியில் வசித்து வருகிறேன். சூசை அருள் என்பவருக்கு நான் தூராப்பள்ளம் பகுதியில் 20 ஏக்கர் நிலம் வாங்கி கொடுத்தது தொடர்பாக 10,12 வருடங்களாக எனக்கு அவரை தெரியும். 19.01.2013 அன்று சூசை அருள் என் வீட்டிற்கு வந்து தூராப்பள்ளம் இடத்திற்கு என்னை அழைத்தார். அவருடன் சூசையின் சின்ன பையன், மாப்பிள்ளை மற்றும் நான் ஆகியோர் காரில் சென்றோம். மேற்படி இடத்தில் சிவா என்பவர் இருந்தார். டிராக்டர் அந்த இடத்தில் உழுதுக் கொண்டிருந்தது. சிவாவுக்கும் சூசை அருளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. நான் ஏன் வாக்குவாதம் செய்கிறீர்கள் என்று கேட்டேன். அவர் வாக்குவாதம் செய்வதை நிறுத்திவிட்டார். முல்லை மற்றும் துரைச்சாமி அந்த இடத்திற்கு வந்தார். சிவா மண்வெட்டியால் சூசை அருளை தாக்கினார். அதற்கு பிறகு அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். நான் மத்தியஸ்தம் செய்ய முடியாது என்பதால் அந்த இடத்தை விட்டு சென்றுவிட்டேன். வெங்கடாச்சலம், சேகர் ஆகியோர்களை சென்று பார்த்தேன். போனில் சொல்ல முடியவில்லை. 15 நிமிடத்தில் சூசை அருள் காரை எடுத்துக்கொண்டு என்னிடம் வந்துவிட்டார்கள். காரின் பின்னால் உடைந்திருந்தது. நான் இருசக்கர வாகனத்தில் ஆரம்பாக்கம் காவல் நிலையம் சென்றுவிட்டேன். சூசை அருள் காவல் நிலையம் சென்றார். பின்னர் துரைச்சாமி, சிவா ஆகியோர் காவல் நிலையம் வந்தார்கள். உதவி ஆய்வாளரிடம் புகார் சூசை அருள் கொடுத்தார். மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் சூசை அருளுக்கு புரோக்கராக இருந்தேனா என்றால் நான் நிலம் வாங்கி கொடுக்கும் புரோக்கர் மட்டும் தான். அந்த பகுதியில் எந்த நிலம் வாங்கினாலும் நான் தான் வாங்கி கொடுப்பேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் தான் எதிரிகள் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நான், வெங்கடேசன், கோவிந்தன் ஆகியோர் சேர்ந்து தான் சூசை அருளுக்கு அந்த பகுதியில் எவ்வளவு இடம் வாங்கிக்கொடுத்தேன் என்றால் 25 ஏக்கர் நிலம் வாங்கிக் கொடுத்தோம். எத்தனை ஏக்கர் யார், யாரிடமிருந்து வாங்கிக்கொடுத்தேன் என்றால் பெயர் தற்போது எனக்கு ஞாபகமில்லை. பெயர்கள் அனைத்தும் வெங்கடேசனுக்கு தான் தெரியும். எனக்கு தெரியாது. சம்பவம் சொல்லபப்டும் இடம் எதிரிகளின் இடம் முத்து ரெட்டி கண்டிகை என்றால் எனக்கு சரியாக தெரியாது. எனக்கு எந்த விவரமும் தெரியாமல் 25 ஏக்கர் நிலம் வாங்கிக்கொடுத்தேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனக்கு விவரம் எதுவும் தெரியாது என்றாலும் நான் சூசை அருளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. டிராக்டரின் எண், என்ன வகை, என்ன கலர் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் அங்கு செல்லவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்து ரெட்டி கண்டிகை கிராமத்தில் சுமார் 30 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் 50 நபர்கள் இருந்தார்களா என்றால் நான் பார்க்கும்போது சிவா மட்டும் இருந்தார். எதிரிகளை பார்த்தேன். ஊர் மக்கள் எவ்வளவு நபர்கள் இருந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ஊர் மக்கள் அங்கு யாரும் இல்லை. 1 மற்றும் 3ம் எதிரிகள் சம்பவம் கேள்விப்பட்டு ஓடிவந்தார்கள் என்றால் சரிதான். எவ்வளவு தூரத்தில் ஓடிவந்தார்கள் என்றால் 500 அடி தூரத்தில் வந்தார்கள். நமக்கு ஏன் பிரச்சனை என்று நான் போய்விட்டேன் என்றால் சரிதான். அதன்பிறகு அவர்கள் வாகனத்தில் சென்றார்கள் என்ற

விவரம் எனக்கு ஏலாவூர் பஜாரில் வைத்து தான் தெரியும் என்றால் சரிதான். நான் பஜார் வந்தபிறகு அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் சூசை அருள் சொல்லித்தான் என்னை சாட்சியாக சேர்த்தார்கள் என்றால் அது அவருக்குத் தான் தெரியும். எனக்கு சம்பவத்தை பற்றி தெரியாது என்றாலும் சூசை அருளுடன் 10, 12 வருடங்களாக இருந்ததால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.